அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 19/2019

எனது இலக்கம் : EST 5/4/24(XXXIII)
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.07.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>சம்பள ஏற்றத் திகதியிலே பதவியுயர்வு கிடைக்கும் போது மற்றும் உத்தியோகத்தரின் விருப்பத்தின் அடிப்படையில் முன்னைய பதவிக்கு வரும் போது ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய சம்பள படிமுறையை தீர்மானித்தல்</u>**

தாபன விதிக்கோவையின் I ஆம் வகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு மற்றும் 6:3 ஆம் உப பிரிவின் பால் தங்களது கவனத்திற்கு தயவுடன் கொண்டு வருகின்றேன்.

02. சம்பள ஏற்றத் திகதியிலே பதவியுயர்வு கிடைத்ததன் அடிப்படையில் அமர்த்தப்பட வேண்டிய சம்பளப் படிமுறை தொடர்பாக தாபன விதிக்கோவையின் I ஆம் வகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவிற்கு பின்வரும் வகையில் 5:8 ஆக புதிய உபபிரிவொன்றினை சேர்ப்பதற்கும் , உத்தியோகத்தர் தனது கோரிக்கையின் படி முன்னைய பதவிக்கு வரும் போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள படிநிலை தொடர்பாக அவ் அத்தியாயத்தின் 6:3 ஆம் உபபிரிவினை கீழ்வரும் வகையில் திருத்தியமைப்பதற்கும் 2019.05.28 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

**"5:8 உத்தியாகத்தர் ஒருவரின் சம்பள ஏற்றத் திகதியும், பதவியுயர்வுத் திகதியும் ஒரே தினத்தில் அமையும் சந்தர்ப்பத்தில் அவ்வாறானதொரு உத்தியோகத்தரை பதவியுயர்த்துவதன் அடிப்படையில் சம்பள மாற்றம் இடம்பெறுவது முன்னைய பதவியில்/ வகுப்பில்/ தரத்தில் அத்திகதிக்கு உரித்தான சம்பள ஏற்றத்தை வழங்குவதன் அடிப்படையில் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மேற் கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.**

**6:3 எவரேனும் ஓர் உத்தியோகத்தர், அவரின் வேண்டுகோளின் அடிப்படையில் அவர் முன்னர் வகித்த பதவிக்கு அல்லது தரத்துக்கு, நியமன அதிகாரியின் பரிந்துரையின் அடிப்படையில் மற்றும் அமைச்சரவையின்/ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் மீள் நியமிக்கப்பட்டால் அவ்வாறு மீள நியமிக்கப்படுதலை புதியதொரு நியமனமாகக் கருதி அவ்வாறு மீள நியமனம் பெற்ற பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் உத்தியோகத்தர் இறுதியாக சேவையாற்றிய வகுப்பு/ தரத்துக்குரிய ஆரம்ப சம்பளம் அவருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்."**

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு